# தலைநகரில் 2,300 ஹெக்டர்

# பசுமைப் பகுதிகள்

## கூட்டரசுப் பிரதேச அமைச்சர் தகவல்



கோலாலம்பூர், ஜூலை 17- தலைநகரில் 2,393 ஹெக்டர் நிலப்பரப்பு பசுமைப் பகுதிகளாக ஒதுக்கப்படும் என கூட்டரசுப்பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா நேற்று மக்க ளவையில் தெரிவித்தார்.

இதில் 977.55 ஹெக்டர் இதற்காக ஒதுக்கப்பட்ட வேளையில் எஞ்சிய 1,416.24 ஹெக்டர் நிலப்பரப்பை பசுமைப் பகுதிகளாக ஒதுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

புக்கிட் கியாரா, புக்கிட் கெரிந்தி, தாமான் தாசேக், மெட்ரோ பொலிடன்ட் கெப்போங், தாமான் தாசேக் புடு உலு, தாமான் தாசேக் தித்திவங்சா ஆகிய பகுதிகள் மக்களின் பயன்பாட்டிற்காக பசுமைப் பகுதிகளாக ஒதுக்கப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்று மக்களவையில் கேள்வி - பதில் நேரத் தின்போது பத்து உறுப்பினர் பி. பிரபாகரன் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளையில் தலைநகரில் 68.26 ஹெக்டர் பசுமைப் பகுதிகள், சேமிப்பு வனமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அவை புக்கிட் நானாஸ், புக்கிட் சுங்கை பூத்தே, புக்கிட் சுங்கை பீசி, புக்கிட் லாபோங் ஆகிய பகுதிகள் சேமிப்பு வனப்பகுதிகளாக அடையாளம் காணப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட பகுதிகள் வீடமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் உட்பட எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடி யாது என்று அவர் கூறினார்.

தலைநகரில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுத் திட்டங்களில் 10 விழுக்காட்டு இடங்கள் காலியாக இருக்க வேண்டும் என கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் விதிமுறைகளை அவசியம் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். வரும் 2040ஆம் ஆண்டு களுக்குள் கோலாலம்பூர் முழுவதும் 100 விழுக்காடு பசுமைப் பகுதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட் டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.